www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

வகுப்பு : 12

தேர்வு எண்

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024 - 25

## பொருளியல்

நேரம் : 3.00 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 90

பகுதி – I

20X1=20

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. புதிய பேரியல் பொருளியலின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
அ) ஆடம்ஸ்மித் ஆ) எம்.ஜே.கீன்சு இ) ராக்னர் பிரிக்சு ஈ) காரல் மார்க்சு
2. முதலாளித்துவத்தை பின்பற்றும் நாடு --------- ஆகும்.
அ) இரஷ்யா ஆ) அமெரிக்கா இ) இந்தியா ஈ) சீனா
3. திறந்துவிடப்பட்ட பொருளாதாரத்தின் சுழல் ஓட்ட மாதிரி என்பது --------- ஆகும்.
அ) இரு துறை மாதிரி ஆ) முத்துறை மாதிரி
இ) நான்கு துறை மாதிரி ஈ) மேலே சொல்லப்பட்ட அனைத்தும்
4. எவற்றைக் கூட்டி வருமான முறையில் நாட்டு வருமானம் கணக்கிடப்படுகிறது?
அ) உற்பத்தி ஆ) வரி இ) செலவு ஈ) வருமானம்
5. GNP = ------------ + வெளிநாட்டுலிருந்து வரும் நிகர காரணி வருமானம்.
அ) NNP ஆ) NDP இ) GDP ஈ) தனிமனிதர் வருமானம்
6. PQLI என்பது --------- ன் குறியீடு ஆகும்.
அ) பொருளாதார வளர்ச்சி ஆ) பொருளாதார நலன்
இ) பொருளாதார முன்னேற்றம் ஈ) பொருளாதார மேம்பாடு
7. வேலைவாய்ப்பு பற்றி தொன்மைக் கோட்பாட்டின் மையக் கருத்து என்பது --------
அ) குறைந்த செல் விளைவு விதி ஆ) தேவை விதி
இ) அங்காடி விதி ஈ) நுகர்வு விதி
8. தொன்மைக் கோட்பாட்டின்படி, வட்டி வீதம் --------- க்கான வெகுமதி.
அ) முதலீடு ஆ) தேவை இ) மூலதனம் ஈ) சேமிப்பு
9. கீன்சின் நுகர்வுச் சார்பு C=10+0.8Y ஆக இருந்து, செலவிடக்கூடிய வருவாய் 100 ஆக இருந்தால், இறுதிநிலை நுகர்வு நாட்டம் எவ்வளவு?
அ) ₹ 0.8 ஆ) ₹ 800 இ) ₹ 810 ஈ) ₹ 0.81
10. MPC ஐயும் MPS ஐயும் கூட்டினால் கிடைப்பது
அ) 1 ஆ) 2 இ) 0.1 ஈ) 1.1
11. மிகைப்பெருக்கி super multiplier என்ற கருத்தை முதல்முதலில் பயன்படுத்தியவர்.
அ) J.R ஹிக்ஸ் ஆ) R.G.D ஆலன் இ) கான் ஈ) கீன்ஸ்
12. இந்திய ரிசர்வ் வங்கியின் தலைமையகம் அமைந்துள்ள இடம்
அ) டெல்லி ஆ) சென்னை இ) மும்பை ஈ) பெங்களூர்
13. காகிதப்பண முறையை மேலாண்மை செய்வது.
அ) மைய பணவியல் அமைப்பு ஆ) மாநில அரசு
இ) மைய அரசு ஈ) வங்கிகள்
14. MV என்பது ----------
அ) பணத் தேவை ஆ) சட்டப்படியான பண அளிப்பு
இ) வங்கிப் பண அளிப்பு ஈ) மொத்த பண அளிப்பு
15. மைய வங்கி நாட்டின் -------- அதிகார அமைப்பு
அ) பணவியல் ஆ) நிதியியல் இ) கூலி ஈ) தேசிய வருவாய்
16. 2016 இல் பணமதிப்பு நீக்கம் எந்த மதிப்புப் பணங்களுக்கு ஏற்படுத்தப்பட்டது?
அ) 500 மற்றும் 1000 ஆ) 1000 மற்றும் 2000
இ) 200 மற்றும் 500 ஈ) மேற்சொன்னவை அனைத்தும்
17. பண மாற்று வீதம் நிர்ணயமாகும் சந்தை
அ) பண சந்தை ஆ) அயல்நாட்டுச் செலாவணி
இ) பங்கு சந்தை ஈ) மூலதன சந்தை
18. அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலை உள்ளடக்கிய இனங்கள்
அ) புலனாகும் பண்டங்கள் மட்டும் ஆ) புலனாகாத பணிகள் மட்டும்
இ) அ மற்றும் ஆ ஈ) பண்ட வாணிகம் மட்டும்
19. சிறப்பு எடுப்பு உரிமையின் மற்றொரு பெயர்.
அ) தாள் தங்கம் ஆ) பங்களவுகள்
இ) தன் விருப்ப ஏற்றுமதித் தடைகள் ஈ) இவை ஏதுமில்லை
20. பெனிலக்ஸ் (BENELUX) என்பது இதன் வடிவமாகும்.
அ) தடையற்ற வாணிகப் பகுதி ஆ) பொருளாதார ஒன்றியம்
இ) பொது அங்காடி ஈ) சுங்கவரி ஒன்றியம்



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

பகுதி – II

II. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். 7x2=14
வினா எண்.30க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.

21. பேரியல் பொருளியலின் இலக்கணம் தருக.
22. "வருமான சுழல் ஓட்டம்" – வரையறு.
23. GNP கணக்கிடும் வாய்பாட்டை எழுதுக.
24. GDP குறைப்பான் இலக்கணம் தருக.
25. 'சே' விதியின் எடுகோள்களைப் பட்டியலிடுக.
26. சராசரி நுகர்வு நாட்டம் (APC) – வரையறு.
27. நெகிழ்ப் பணம் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
28. செலாவணி மாற்று வீதம் என்றால் என்ன?
29. எங்கு, எப்பொழுது சார்க் தலைமை அலுவலகம் துவங்கப்பட்டது?
30. CRR மற்றும் SLR ஆகியவற்றை வேறுபடுத்துக.

பகுதி – III

III. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். 7x3=21
வினா எண்.40க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.

31. பேரியல் பொருளாதாரத்தின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.
32. தலைவீத வருமானம் பற்றி ஒரு சிறு குறிப்பு எழுதுக.
33. காரணி செலவில் NNP – குறிப்பு தருக.
34. கீன்சின் கோட்பாட்டை விளக்குக.
35. தொகு தேவை என்றால் என்ன? அதன் கூறுகளைக் கூறுக.
36. தன்னிச்சையான முதலீடு, தூண்டப்படுகிற முதலீடு ஆகியவற்றை வேறுபடுத்துக.
37. பண அளிப்பினைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை?
38. நபார்டின் பணிகள் யாவை?
39. சார்க்கின் பணிகளைச் சுருக்கமாகக் கூறுக.
40. கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் விடுபட்ட MPC, MPS மற்றும் K யின் மதிப்பை கணக்கிடுக.

| MPC | MPS | K |
|---|---|---|
| 0.00 | 1.00 | ? |
| ? | 0.90 | 1.11 |
| 0.50 | ? | 2.00 |
| 0.75 | 0.25 | ? |
| ? | 0.10 | 10.00 |
| 1.00 | ? | ? |

பகுதி – IV

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7x5=35

41. (அ) முதலாளித்துவம், சமதருமம், கலப்புப் பொருளாதாரம் ஆகியவற்றின் தன்மைகளை ஒப்பிடுக.
(அல்லது)
(ஆ) நாட்டு வருமானத்தின் முக்கியத்துவத்தை விவரி.
42. (அ) நாட்டு வருமானத்தைக் கணக்கிடும் முறைகளை விளக்குக.
(அல்லது)
(ஆ) பேரினப் பொருளியலின் பரப்பெல்லையை விவரி.
43. (அ) ADF, ASF க்கு இடையிலான சமநிலையை வரைபடம் மூலம் விவரி.
(அல்லது)
(ஆ) மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறனுக்கும் (MEC) முதலீட்டின் இறுதிநிலை உற்பத்தி திறனுக்கும் (MEI) உள்ள வேறுபாடுகள் யாவை?
44. (அ) வணிகச் சுழற்சியின் பல்வேறு கட்டங்களை விவரிக்க.
(அல்லது)
(ஆ) பெருக்கி இயங்கும் விதத்தினை விவரி.
45. (அ) இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விவரிக்க.
(அல்லது)
(ஆ) உள்நாட்டுவாணிகத்துக்கும் பன்னாட்டு வாணிகத்துக்குமிடையிலான வேறுபாடுகளை விவாதிக்கவும்.
46. (அ) குறிப்பு எழுதுக. அ) சார்க் ஆ) ப்ரிக்ஸ்
(அல்லது)
(ஆ) பணத்தின் பணிகளை விளக்குக.
47. (அ) பன்னாட்டுப் பணநிதியத்தின் நோக்கங்களை விளக்குக.
(அல்லது)
(ஆ) வேலையின்மைகளின் வகைகளை விவரி.



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com